**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.43/2021

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 01.12.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.2– கருப்பையா த/பெ ராமசாமி</u>**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. துரைசாமி அப்பா பெயர் தெரியாது. வாதி பாரதியின் தந்தை பெயர் கந்தசாமி ஆகும். தாவா சொத்தின் சர்வே எண். 33 ல் எவ்வளவு விஸ்திரணம் என்றால் 5 ஏக்கர் 90 செண்ட் ஆகும். சர்வே எண். 33 என்பது எத்தனை உட்பிரிவாக ஆகியுள்ளது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி துரைசாமியின் சகோதரர்3 ம் பிரதிவாதி முருகனிடம் வாதி பாரதி கிரையம் வாங்கியுள்ளார். அந்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் இல்லை. வாதி பாரதி கிரையம் வாங்கியபோது என்ன நடந்தது என்று எனக்க நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

2. முருகனுக்கு எவ்வாறு சொத்து பாத்தியம் என்றால் அவர்களுடைய அண்ணன் தம்பியிடம் பாகம் பிரித்துக்கொண்டார்கள். முருகனும் அவரது சகோதரர்களும் பாகம் பிரித்துக்கொண்டதில எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் யார்யாருக்கு பிரிந்தது என்று எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரர்களுக்கு பாகம் ஏற்பட்டது 2010 ம் ஆண்டாகும். மேற்படி பாகப்பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் இல்லை. வழக்கில் கூறப்பட்டுள்ள ஏ அட்டவணைச்சொத்து, பி அட்டவணைச்சொத்து, சி அட்டவணைச்சொத்து எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரத்தில் உள்ளது தெரியயுமா என்றால் தெரியாது.

3. துரைசாமி முருகனுக்கு விற்பனை செய்த பத்திரத்திலும் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். துரைசாமி அவரது சகோதரர்கள் இடையே ஏற்பட்ட பாகபத்திரத்தில் என்னென்ன நிபந்தனைகள் உள்ளது என்று எனக்குத் தெரியாது. 12 அடி அகலமுள்ள கிழமேல் பாதை என்று நான் சொல்வதற்கு அதன் நீளம் தெரியுமா என்றால் 200 லிருந்து 300 மீட்டர் தூரம் துரைசாமி கேணியிலிருந்து வாதி பாரதி இடம் வரைச்செல்கிறது. துரைசாமி முருகனுக்கு விற்பனை செய்த இடத்தின் உட்பிரிவு எனக்குத் தெரியாது.

4. முருகனிடம் வாதி பாரதி வாங்கிய பத்திரத்தை எப்போது நான் பார்த்தேன் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு பார்த்தேன். ஒரு வாரத்திற்கு முன்பு பத்திரத்தை காட்டி சாட்சி சொல்ல கூப்பிட்ட பிறகு தான் பார்த்தேன் என்றால் அதற்கு முன்பே தெரியும். சர்வே எண். 33/1, 33/2 ல் உள்ள விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. துரைசாமி, முருகன், வாதி இவர்களின் சொத்தை நான் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. முருகனிடம் வாதி பாரதி சொத்தை வாங்கும் முன்பு அளந்து பார்த்தாரா என்றால் எனக்குத் தெரியாது.

5. 4ம் பிரதிவாதி பாப்பா யாரிடம் சொத்து வாங்கினார் என்றால் 1ம் பிரதிவாதி துரைசாமி வகையறாவிடம் வாங்கியுள்ளார் எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியாது. 5ம் பிரதிவாதி மதியழகனும் 1ம் பிரதிவாதி துரைசாமி வகையறாவிடம் சொத்து வாங்கியுள்ளார் எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியாது. வாதி கிரையம் பெற்ற பத்திரத்தில் நான்கெல்லை என்ன குறிப்பிட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. தென்வடல் வண்டிப்பாதையின் நீளம் 10 மீட்டருக்கு அதிகமாக இருக்கும். 2015ம் ஆண்டு வண்டிப்பாதையை அழித்தாக முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளதற்கு தேதி மாதம் தெரியுமா என்றால் தெரியாது.

6. 35 செண்ட்டை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளதற்கு தேதி மாதம் எனக்குத் தெரியாது. 35 செண்ட்டிற்கு தென்வடல் கிழமேல் அளவு தெரியுமா என்றால் தெரியாது. 35 செண்டை ஆக்கிரமித்தாக நான் சொல்வதற்கு அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. பாதையை அழித்தாகவும், 35 செண்ட்டை ஆக்கிரமிப்பு செய்ததாகவும் வாதி பாரதி சொல்லித்தான் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு அருகே எனக்கு சொத்து உள்ளதா என்றால் தள்ளியுள்ளது.

7. எனது சொத்தின் பட்டா எண். 88/1 கோவில் மானியமாகும். வழக்கு சொத்து அருகில் எனக்கு எந்த சொத்து இல்லையென்றாலும் வாதி பாரதி எனக்கு நண்பர் என்பதாலும், வாதி தயார் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனக்கு தெரியாத விசயத்திற்காக நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் கிழமேல் பாதை எங்குமில்லை என்றால் சரியல்ல.

**மேற்படி 1, 2 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை முழுவதும் 5ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு அனுமதிக்கப்பபட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.05 10:23:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.